2005 மார்ச் 30]

247—

பிளீச்சிங் பவுடர் தொழிற்சாலை

***57607—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் உள்ள ஆறுகளில் கிளிஞ்சல்கள் கிடைப்பதால் பிளீச்சிங் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள உப்பனாறுகளில் குறிப்பாக வெள்ளப்பள்ளம், திருநகரி, எடமணல், ராதாநல்லூர், தாழந்தோண்டி, காட்டூர், செம்மங்காடு ஆகிய பகுதிகளில் உள்ள உப்பனாறுகளில் அதிகளவு கிளிஞ்சல்கள் கிடைக்கின்றன. அவை லாரியில் வெளியூர்களுக்கு ஏற்றிச் செல்லப்படுகின்றன. அக்கிளிஞ்சல்களைக் கொண்டு சீர்காழி பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் பிளீச்சிங் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிளிஞ்சல் தொழில் என்பது அரசு நிர்ணயம் செய்து வைத்திருக்கிற புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் பல்வேறு தொழில்கள் செய்தால், இந்தத் தொழிலில் கடன் உதவி வழங்கி அந்தந்தப் பகுதிகளிலே ஒரு தொழிற்சாலை தொடங்குவதற்குரிய வாய்ப்புகளை சிறுதொழில் வாரியம் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி அறிவித்திருக்கிறது. அந்த குறிப்பிட்டிருக்கக்கூடிய தொழில்களில் இந்தக் கிளிஞ்சல்கள் மூலமாக பிளீச்சிங் பவுடர் செய்யக்கூடிய தொழிற்சாலை அமைப்பதற்குரிய அந்தத் தொழில்

அதிலே இடம் பெறவில்லை. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற பிளீச்சிங் பவுடர் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை தொடங்குவதற்கு அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால் அவர்களுக்கு மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக கடன் உதவிகளைப் பெற்று குழுவாகவோ அல்லது கூட்டமைப்பின் மூலமாகவோ அவர்கள் தொடங்குவதற்கு அரசு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. நா. சந்திரமோகன்.*

திரு. நா. சந்திரமோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 248, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.*

248—

ஆதிதிராவிடர் நலத் துறை ஆரம்பப் பள்ளி

***36539—திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, பெரியபகண்டை காலனியில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் ஆரம்பப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 249, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*